# ‘ஆட்டிஸம் குறைபாடு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு தேவை’

**சென்னை, டிச.14 :** அறிவுத் திறன் குறைபாடு (ஆட்டிஸம்) குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என இந்திய நடத்தையியல் நிபுணர்கள் சங்கத்தின் (ஏபிஏ இந்தியா) தென்னிந்திய துணைத் தலைவர் கீதா ஸ்ரீகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

ஏபிஏ இந்தியா சங்கத்தின் சார்பில், ஆட்டிஸம் குறித்த 4-ஆவது சர்வதேச மாநாடு சென்னையில் சனிக்கிழமை தொடங்கியது. இரண்டு நாள் நடைபெறும் இம் மாநாட்டின் தொடக்க விழாவில், ஏபிஏ இந்தியா சங்கத்தின் தென்னிந்திய துணைத் தலைவர் கீதா ஸ்ரீகாந்த் பேசியதாவது:

உலகளவில் சராசரியாக 58 குழந்தைகளில் ஒரு குழந்தை பிறவிக் குறைபாடான அறிவுத் திறன் குறைபாட்டால் பாதிக்கப்படுவதாக அமெரிக்க புள்ளிவிவரம் தகவல் தெரிவிக்கிறது. இப் பாதிப்புள்ள குழந்தைகளை மூன்று வயதுக்குள் கண்டறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் அவர்கள் சந்திக்கும் உளவியல் ரீதியான பாதிப்புகளில் இருந்து காப்பாற்ற முடியும்.

ஆனால், நம் நாட்டில் அறிவுத் திறன் குறைபாடு குறித்த விழிப்புணர்வு பெரும்பாலான பெற்றோர்களுக்கு இல்லாததால், இந்நிலைக்கு ஆளான தங்கள் குழந்தைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்க அவர்களால் முடியவில்லை.

இந் நிலை மாற முதல்கட்டமாக, அறிவுத் திறன் குறைபாடுள்ள குழந்தைகள் குறித்த தேசிய அளவிலான கள ஆய்வுகளை நடத்தி புள்ளிவிவரங்களைச் சேகரிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் கீதா ஸ்ரீகாந்த்.

நரம்பியல் நிபுணர் டாக்டர் இ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது: மரபணு குறைபாடு, கர்ப்ப காலத்தில் பெண்ணுக்கு ஏற்படும் சில நோய்கள், பிறந்த குழந்தைக்கு ஆரம்ப காலத்தில் மூளையில் ஏற்படும் காயங்கள் போன்றவை அறிவுத் திறன் குறைபாடுக்கு காரணங்களாக இருக்கலாம். தனிமையை விரும்புவது, கண்களைப் பார்த்து பேசாதது, ஒரே செயலை திரும்ப திரும்ப மேற்கொள்வது போன்றவை அறிவுத் திறன் பாதிப்புக்கான சில அறிகுறிகளாகும் என்றார் அவர்.

மாநாடு தொடக்க நிகழ்ச்சியில், தமிழக அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஆணையர் வீ.கே.ஜெயக்கொடி, நடத்தையியல் நிபுணர் சான்றிதழ் வாரியத்தின் நிர்வாகி சுமித்தா அவஸ்தி, மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றத்துக்கான தேசிய நிறுவனத்தின் இயக்குநர் நீரதா சந்திரமோகன், கர்நாடக இசைக் கலைஞர் பாம்பே ஜெயஸ்ரீ, நடத்தையியல் நிபுணர் டாக்டர் வில்லியம் ஹேவார்டு உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.

இம் மாநாட்டில், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அறிவுத் திறன் குழந்தைகளின் பெற்றோர், சிறப்பு பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 200 க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.




ஏபிஏ இந்தியா சங்கம் சார்பில், சென்னையில் சனிக்கிழமை தொடங்கிய ஆட்டிஸம் குறித்த சர்வதேச மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற (இடமிருந்து) வீ.கே.ஜெயக்கொடி, கீதா ஸ்ரீகாந்த், நீரதா சந்திரமோகன், டாக்டர் வில்லியம்ஸ் ஹெவார்டு, பாம்பே ஜெயஸ்ரீ, சுமித்தா அவஸ்தி, டாக்டர் இ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி.